செ.வெ.எண்: 998/2017 நாள்: 29.12.2017

**கன்னியாகுமரி மாவட்டத்தில் ஒகி புயலால் பாதிக்கப்பட்ட பல்வேறு இடங்களில் மத்திய குழு இரண்டாவது நாளாக நேரில் ஆய்வு.**

கன்னியாகுமரி மாவட்டத்திற்கு வருகை தந்து, ஒகி புயல் சேதங்களை ஆய்வு செய்யும் பணியினை மேற்கொண்டு வரும் மத்திய ஆய்வு குழு உறுப்பினர் மத்திய வேளாண்மை கூட்டுறவு மற்றும் விவசாயிகள் நல இயக்குநர் டாக்டர் கே. மனோகரன் அவர்கள், இன்று (29.12.2017) மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. சஜ்ஜன்சிங் ரா.சவான் இ.ஆ.ப., அவர்களுடன் சென்று பார்வையிட்டு, ஆய்வு செய்தார்கள்.

திருப்பதிசாரம், சுசீந்திரம் கற்காடு, வடக்கு தாமரைகுளம், கல்குறும்பொத்தை, பறக்கை, ஒசரவிளை ஆகிய பகுதிகளில் ஒகி புயலால் சேதமடைந்த நெற்பயிர்கள், தென்னை உட்பட வேளாண்மைத்துறை மற்றும் தோட்டக்கலைத்துறை பயிர்வகைகளை பார்வையிட்டு, விவசாயிகளிடம் பாதிப்புகள் குறித்து கேட்டறிந்தார். மேலும், திருப்பதிசாரம் வேளாண்மை ஆராய்ச்சி நிலையம் ஆய்வகத்தில் வைக்கப்பட்டிருந்த ஒகிபுயலினால் ஏற்பட்ட வெள்ளத்தில் மூழ்கி சேதமடைந்த நெல், வெள்ளத்தில் மூழ்கி பழுதடைந்த டிராக்டர், சேதமடைந்த தொழிலாளர் ஓய்வறை, கருத்தரங்கு கூடம், சேமிப்பு கிட்டங்கி ஆகியவற்றை பார்வையிட்டு, ஆய்வு செய்தனர். மேலும், திருப்பதிசாரம் வேளாண்மை அறிவியல் நிலைய வளாகத்தில் பயிரிட்டு, ஒகி புயலினால் சேதமடைந்த டி.பி.எஸ் 5 ரக நெல் வகைகளை பார்வையிட்டு, அதன் மகசூல் குறித்து அலுவலர்களிடம் கேட்டறிந்தார்.

மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. சஜ்ஜன்சிங் ரா.சவான் இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்ததாவது:-

கன்னியாகுமரி மாவட்டத்தில் ஒகி புயலினால் ஏற்பட்ட சேதங்களை மத்திய உள்துறை இணை செயலாளர் திரு. சஞ்சீவ் குமார் ஜிந்தால் அவர்கள் தலைமையில், மத்திய குழுவினர் இரண்டு நாட்களாக ஆய்வு செய்து வருகிறார்கள். 28.12.2017 அன்று சுருளோடு, மருந்துகோட்டை, ஈசாந்திமங்கலம், கல்படிஏலா, நீரோடி, தூத்தூர் ஆகிய பகுதிகளுக்கு சென்று, ஒகி புயலினால் ஏற்பட்ட சேதங்களை பார்வையிட்டு, ஆய்வு செய்தார்கள். மேலும், மத்திய குழுவினர், சட்டமன்ற உறுப்பினர்கள், தொண்டு நிறுவனங்கள் மற்றும் பொதுமக்களிடமிருந்து மனுக்களை பெற்றுக்கொண்டார்கள். இன்று மத்திய வேளாண்மை கூட்டுறவு மற்றும் விவசாயிகள் நல இயக்குநர் டாக்டர் கே. மனோகரன் அவர்கள், நெல், வாழை, தென்னைமர சேதங்கள் குறித்து திருப்பதிசாரம், சுசீந்திரம், வடக்குதாமரைகுளம், பறக்கை ஆகிய இடங்களுக்கு சென்று ஆய்வு செய்தார்கள். மீன்வள ஆணையர் மற்றும் குழு உறுப்பினர்கள் டாக்டர் பி. பால்பாண்டியன், மத்திய கப்பல்துறை அலுவலர் திரு. பரமேஷ்வர் பாலி ஆகியோர்கள், குளச்சல் மற்றும் முட்டம் துறைமுகத்திற்கு சென்று, சேதமடைந்த அலை தடுப்புச்சுவர் மற்றும் துறைமுகத்தின் செயல்பாடுகள் குறித்து

ஆய்வு செய்தார்கள். மத்திய மின்துறை துணை இயக்குநர் மற்றும் மத்திய குழு உறுப்பினர் திரு. ஒ.பி.சுமன் அவர்கள், பேச்சிப்பாறை துணை மின்நிலையத்தின் செயல்பாடுகள் மற்றும் சீரமைக்கப்பட்ட மின்கம்பங்கள் ஆகியவற்றை பார்வையிட்டு, ஆய்வு செய்தார்கள். இந்த கள ஆய்வின் அறிக்கையினை, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களிடம் கலந்துரையாடி, பின்னர் மத்திய அரசுக்கு சமர்ப்பிக்க உள்ளார்கள் என மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. சஜ்ஜன்சிங் ரா.சவான் இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்தார்.

மீன்வள ஆணையர் மத்திய குழு உறுப்பினர் டாக்டர் பி. பால்பாண்டியன், குழு உறுப்பினர் மத்திய கப்பல்துறை அலுவலர் திரு. பரமேஷ்வர் பாலி ஆகியோர்கள் குளச்சல் துறைமுகத்திற்கு நேரடியாக சென்று, சேதமடைந்த அலை தடுப்பு சுவர் மற்றும் துறைமுகத்தில் ஏற்படுத்தப்பட்டுள்ள வசதிகள் மற்றும் செயல்பாடுகளை ஆய்வு செய்தார்கள். மேலும், முட்டம் துறைமுகத்தில் சேதமடைந்த அலை தடுப்புச்சுவர்களை பார்வையிட்டார்கள்.

மத்திய மின்துறை துணை இயக்குநர் மற்றும் குழு உறுப்பினர் திரு. ஒ.பி.சுமன் அவர்கள், பேச்சிப்பாறை துணை மின்நிலையத்திற்கு சென்று பார்வையிட்டு, மின்நிலையத்தின் செயல்பாடுகளை ஆய்வு செய்தார். பின்னர், கோதையாறு செல்லும் சாலையில் சீரமைக்கப்பட்ட மின்கம்பங்கள் மற்றும் மின்ஒயர்களை பார்வையிட்டு, ஆய்வு செய்தார்.

ஆய்வின்போது, மீன்வளத்துறை கூடுதல் இயக்குநர் திரு. சமீரன் இ.ஆ.ப., பத்மநாபபுரம் சார் ஆட்சியர் திரு. இராஜகோபால் சுன்கரா இ.ஆ.ப., இணை இயக்குநர் (வேளாண்மைத்துறை) திரு. பாண்டியன், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (வேளாண்மை) திரு. நிஜாமுதீன், துணை இயக்குநர் (மீன்வளத்துறை) திரு. லேமக் ஜெயக்குமார் மற்றும் அரசு அலுவலர்கள் உடனிருந்தனர்.

---

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், கன்னியாகுமரி மாவட்டம்.